தினகரன்
புதுக்கோட்டை



இந்த நாள்

- பராபவ வருடம் ஆவணி மாதம் 24-ம் நாள். வியாழக்கிழமை. தேய்பிறை.
- திதி: சதுர்த்தசி காலை 10.31 மணி வரை; அதன் பிறகு கரூர் அமாவாசை.
- நட்சத்திரம்: மகம் பகல் 3.14 மணி வரை; அதன் பிறகு பூரம்.
- யோகம்: அமிர்த யோகம். ▸ சூலம்: தெற்கு; பரிகாரம்: தைலம்.
- நல்ல நேரம்: காலை 10.45 - 11.45; மதியம் 12.15 - 1.15 மணி வரை.
- ராகு காலம்: மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- எமகண்டம்: காலை 6.00 - 7.30 மணி வரை.
- சந்திராஷ்டமம்: திருவோணம், அவிட்டம்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
37 C / 98.6 F	27 C / 80.6 F	36 C / 96.8 F	27 C / 80.6 F

ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும்.

கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கத்தில்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி

மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை, செப். 10: புதுக்கோட்டை மாவட்டம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை மாவட்ட கலெக்டர் அருணா, நேற்று துவக்கி வைத்தார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டது. இப்போட்டி புதுகை விளையாட்டு அரங்கம் மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களில் நேற்று 9ம்தேதி முதல் துவங்கி வரும் 28ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த ஆண்டு மாவட்டம் முழுவதிலும் இருந்து 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கும் 17 வயது முதல் 25 வயது வரை கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வயது வரை பொது பிரிவினர் மற்றும் அனைத்து வயது மாற்றுத்திறனாளிகள் என 73,878 வீரர்கள் முன்பதிவு செய்தனர். மாவட்ட அளவில் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூ.3000, இரண்டாம் பரிசு ரூ.2000, மூன்றாம் பரிசு ரூ.1000 வழங்கப்படுகிறது. போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும்.

எனவே விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் பங்கு பெற்று தங்கள் விளையாட்டுத்திறனை மேம்படுத்தி பரிசு தொகை மற்றும் பதக்கம் பெறவும் மாவட்ட அளவில் போட்டிகளில்வெற்றி பெற்றவர்கள் வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டியில் பங்கேற்று அதிக அளவிலான பதக்கங்களை வென்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், முதன்மை கல்வி அலுவலர் சண்முகம் , விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் குணசேகரன், உடற்கல்வி ஆய்வர் தங்கராஜ், இளையோர் அலுவலர் ஜோயல் பிரபாகர், மாவட்ட சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் சாலைசெந்தில் மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள், ஆசிரியர்கள், வீரர் வீராங்கனைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▸ புதுக்கோட்டை மாவட்டம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கத்தில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை கலெக்டர் அருணா தொடங்கி வைத்தார்.

உணவு கிடைக்காமல் மாணவர்கள் திண்டாட்டம்

மாணவர்களுக்கு ஜூஸ் மற்றும் மதிய உணவு எதுவும் கிடைக்காமல் கொளுத்தும் உச்சி வெயிலில் உடல் சோர்வோடு விளையாடினர். போட்டியில் பங்கேற்றுள்ள விளையாட்டு மாணவர்களுக்கு கடந்த ஆண்டு வரை முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் போது விளையாட்டு வீரர்களுக்கு தண்ணீர், பழரசங்கள், மதிய உணவு வழங்கினார்கள். அதை நினைத்து மதிய உணவு இல்லாமல் வந்தோம். ஆனால் இங்கே தண்ணீர் மட்டும் வைத்திருக்கிறார்கள். உணவும் இல்லை, பழரசமும் இல்லை. அடிக்கிற வெயிலில் எப்படி விளையாடுவது' என்று மாணவர்கள் திண்டாடினர். கடந்த காலங்களைப் போல விளையாட்டு வீரர்களுக்கு உணவு, பழரசம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளையாட்டு வீரர்கள் தெரிவித்தனர்.

காவிரி குழாய் உடைந்து கடைவீதி சாலையில் தண்ணீர் வீணாகிறது

இலுப்பூர், செப். 10: இலுப்பூர் சின்னக்கடை வீதியில் காவிரி குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் சாலையில் வீணாகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் பேரூராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் சில குடிநீர் வினியோகம் செய்யும் பைப்புகள் இலுப்பூர் சின்னக்கடை வீதி வழியே செல்கிறது. இந்த சின்னக்கடைவீதி சாலை இலுப்பூர்-புதுக்கோட்டை பிரதான சாலையாகும். இச்சாலை வழியே அனைத்து பேருந்துகள் மற்றும் வாகனங்களும் வந்து செல்கின்றன. இந்த சாலை ஓரத்தில் குடிநீர் குழாய் இணைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி செல்கிறது. இதனால் தன் வழியே செல்லும் வாகன ஓட்டிகள் வாகனத்தை இயக்க மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே வீணாகும் குடிநீர் உடைப்பை சீரமைக்கு வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



▸ இலுப்பூர் சின்னக்கடை வீதியில் சாலை ஓரத்தில் குழாய் உடைந்து குடிநீர் வீணாகி செல்கிறது.

கறம்பக்குடி அருகே

பள்ளி மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டி



▸ கறம்பக்குடி அரசு பள்ளியில் துளிர் வினாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கறம்பக்குடி, செப். 10: கறம்பக்குடி அருகே அரசு பள்ளி மாணவர்களுக்கு துளிர் வினாடி-வினா போட்டி நடந்தது. புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளி மாணவ, மாணவிகளுக்கு துளிர் வினாடி வினா போட்டி நடைபெற்றது.

இதில் அறிவியல் இயக்க ஒன்றிய தலைவர் சர்பிரசாதம் தலைமை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் செல்வராஜ் முன்னிலை வகித்தார். துளிர் வினாடி வினா போட்டியில் 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டியில் செவ்வாய் பட்டி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலை பள்ளி, திருமணஞ்சேரி அரசு உயர்நிலை பள்ளி, கறம்பக்குடி அரசு மகளிர் மேல்நிலைபள்ளி 3 மாணவ, மாணவிகள் முதல் இடத்தையும் மைலன் கோன் பட்டி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலை பள்ளி, அம்புக் கோவில் அரசு உயர்நிலை பள்ளி, அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலை பள்ளி, முள்ளங்கிறிச்சி 2ம் இடத்தையும், இலைகடி விடுதி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி, கறம்பக்குடி அரசு மகளிர் மேல்நிலை பள்ளி ரீனா மெர்சி மெட்ரிக் பள்ளி 3 இடத்தை பெற்னர். இந்நிகழ்ச்சியில் வட்டார கல்வி அலுவலர் செலினா வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார். துளிர் வினாடி வினா போட்டியில் 20 க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து மாணவ, மாணவிகள் , ஆசிரியர்கள், கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் முத்து நன்றி கூறினார்.

புதுகை அருகே பரபரப்பு

2 வீடுகளில் பெட்ரோல் குண்டு வீச்சு

புதுக்கோட்டை, செப்.10: புதுக்கோட்டை அருகே 2 வீடுகளில் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவத்தில் 2 பேரை போலீசார் நேற்று கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அருகே ராப்பூசலை சேர்ந்தவர் சரவணன் (40). அதே ஊரை சேர்ந்தவர் துரையன். இவர் தற்போது புதுக்கோட்டையில் வசித்து வருகிறார். இவர்களுக்கு இடையே சொத்து பிரச்சனை இருந்து வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் பிரச்சனைக்குரிய இடத்தில் இருந்த சீமைக்கருவேல மரத்தை கடந்த வாரம் சரவணன் தரப்பினர் வெட்டியதாக கூறப்படுகிறது. இதனால் இவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்தது. இதனையடுத்து துரையன் மகன் கமலேஷ் (21), அவரது நண்பர் புதுக்கோட்டை நரிமேடையை சேர்ந்த தருண் (19) ஆகிய இருவரும் நேற்று அதிகாலை சரவணன் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசியதில், வீட்டின் முன்வாசலில் தீப்பிடித்து எரிந்தது. இதில் அதிஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சம்பவத்திற்கு பிறகு அங்கிருந்து தப்பி வந்த கமலேஷ் மற்றும் தருண் ஆகிய இருவரும், ஏற்கனவே இருந்த முன் விரோதத்தில் புதுக்கோட்டை பசும்பொன் நகரை சேர்ந்த அப்துல்லா என்பவரது வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசியுள்ளனர். இதில் தீப்பிடித்து எரிந்ததில் எதிர்பாராத விதமாக தருணுக்கு தீக்காயம் ஏற்பட்டது. இதில் காயமடைந்த தருண் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து திருக்கோகர்ணம் மற்றும் இலுப்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து தருண் மற்றும் கமலேஷ் ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். இதில் கைதான தருண் போலீஸ் பாதுகாப்புடன் சிகிச்சையில் இருந்து வருகிறார்.

அறந்தாங்கி அருகே

அரசு பள்ளியில் வினாடி-வினா போட்டி



▸ மணமேல்குடி ஒன்றியத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் துளிர் வினாடி-வினா போட்டி நடந்தது.

அறந்தாங்கி, செப்.10: அறந்தாங்கி அருகே அரசு பள்ளியில் வினாடி-வினா போட்டி நடந்தது. புதுக்கோட்டை மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் வழிகாட்டுதலின்படி மணமேல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் துளிர் வினாடி வினா நிகழ்வினை பள்ளி தலைமை ஆசிரியர் ஜீவானந்தம் தொடங்கி வைத்தார். வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு சிவயோகம் முன்னிலை வகித்தார்.

மணமேல்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட 6ம்வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை துளிர் வினாடி வினா போட்டி நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் பொறுப்பாளர்கள் தங்கராஜ் ஆசிரியர் மற்றும் இளையராஜா ஆசிரியர் மற்றும் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டு நடத்தினார்கள்.

இதில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சசிகுமார் பன்னீர்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஒவ்வொரு பள்ளியில் 6 முதல் 8ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும், 9 10 ஒரு பிரிவாகவும், 11 12 ஒரு பிரிவாகவும் வினாடி வினா போட்டி நடைபெற்றது.

ஒவ்வொரு பள்ளியில் இருந்தும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற பள்ளிகள் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி மேலஸ்தானம், அரசு உயர்நிலைப்பள்ளி இடையாத்திமங்கலம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மணமேல்குடி இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

அன்னவாசல் அருகே

டூவீலரில் கீழே விழுந்து தொழிலாளி சாவு

இலுப்பூர், செப். 10: அன்னவாசல் அருகே டூவீலரிலிருந்து நிலை தடுமாறி கீழே விழுந்து தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே மண்ணவேளம்பட்டியை சேர்ந்தவர் மணிகண்டன் (47). கூலி தொழிலாளி. இவர் நேற்று முன்தினம் தனது டூவீலரில் அன்னவாசலுக்கு சொந்த வேலைக்காக சென்று விட்டு மீண்டும் வீடு திரும்பிய போது மண்ணவேளம்பட்டி சாலை அடைக்கன்குளம் அருகே சென்றபோது நிலை தடுமாறி சாலையில் கவிழ்ந்தது.

இதில் மணிகண்டன் படுகாயம் அடைந்தார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அன்னவாசல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

மேலும் இது குறித்து அன்னவாசல் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொன்னமராவதி அருகே

இலவச கண் சிகிச்சை முகாம்



▸ பொன்னமராவதி அருகே ஆலவயலில் இலவச கண்சிகிச்சை முகாம் நடந்தது.

பொன்னமராவதி, செப். 10: பொன்னமராவதி அருகே ஆலவயலில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள ஆலவயல் சமுதாயக்கூடத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. அதன்பிறகு புதுகை மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சிகளிலும் அரசின் சார்பில் கண் சிகிக்கை முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக ஆலவயலில் நடைபெற்ற முகாமிற்கு புதுகை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மருத்துவர்கள் பிரகாஷ், சுகதாரணி ஆகியோர் தலைமையிலான மருத்துவக்குழுவினர் ஆலவயல் மற்றும் சுற்றுப்பகுதிகளைச்சேர்ந்த பொதுமக்களுக்கு கண் பரிசோனை செய்தனர். இதில் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்படுகின்றனர். இந்நிகழ்வில் ஆலவயல் ஊராட்சி செயலாளர் பஞ்சவர்ணம் செம்பன் மற்றும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விராச்சிலை விலக்கு சாலை சீரமைக்கப்படுமா?

திருமயம், செப்.10: புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வழியாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் வாகனங்கள் சென்று வருகிறது.

இந்நிலையில் திருமயம் தாமரைக்கண்மாய் பகுதியில் உள்ள விராச்சிலை விலக்கு சாலை பகுதியில் சாலையின் நடுவே சிறிய அளவிலான பள்ளம் ஏற்பட்டது. தொடர்ந்து கனரக வாகன போக்குவரத்து காரணமாக சிறிய அளவிலான பள்ளம் நாளுக்கு நாள் பெரிதடைந்து வருகிறது. தற்போது அந்தப் பள்ளம் சாலையின் நடுவே மிகப்பெரிய அளவில் உள்ளதால் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் பள்ளம் இருப்பது தெரியாமல் விபத்தில் சிக்கும் நிலை உருவாகியுள்ளது. அதேசமயம் வாகன ஓட்டிகள் வாகனத்தை பள்ளத்தில் விடாமல் இருக்க வாகனங்களை மாற்று பாதையில் இயக்குவதால் அதிகளவு விபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விபத்துக்கு காரணமாக இருக்கும் சாலையின் நடுவே உள்ள பள்ளத்தை சரி செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்ரேட் அலுவலகம்: சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி 54 & சி 55, 4, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600032, தமிழ்நாடு.

கோரிக்கை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (''சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (''விதிகள்'') விதிகளின் கீழ்

கீழே கையொப்பமிட்டவர் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியாவார். மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் மேலும் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு(கள்) வழங்கி, பின்வரும் கடன்தாரர்(கள்) சம்பந்தப்பட்ட அறிவிப்பில்(கள்) குறிப்பிட்ட தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்(கள்) கோரிக்கை அறிவிப்பு(கள்) பெறுவதைத் தவிர்க்கிறார்/கள் என்று கீழே கையொப்பமிட்டவர் தகுந்த காரணங்களுடன் நம்புவதால், கோரிக்கை அறிவிப்பு சேர்ப்பித்தல் ஆனது விதிகளின்படி இணைத்தல் மற்றும் பிரசுரித்தல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. கோரிக்கை அறிவிப்பின்(கள்) உள்ளடங்கங்கள் இங்கே கீழே சுருக்கி தரப்பட்டுள்ளன:

வ. எண்.	கடன்தாரர்/கள் & உப-கடன்தாரர்/கள் பெயர் மற்றும் முகவரி	கடன் தொகை	கோரிக்கை அறிவிப்பு நாள் & நிலுவைத் தொகை	சொத்து / கடனீட்டுச் சொத்து விவரம்
1	கடன் கணக்கு எண்(கள்): HL05TRC000026067 1. திரு/திருமதி. சின்னதம்பி 2. திரு/திருமதி. கீதா சின்னதம்பி வ. எண். 1 & 2 இன் முகவரி:– எண்.328, செல்லம்பட்டி மீனவேலி அஞ்சல், அகரப்பட்டி புதுக்கோட்டை, கோவில், இலுப்பூர், தமிழ்நாடு – 621305, வ. எண். 1 & 2 இன் முகவரி:– S.F.No.393/5b பட்டா எண். 2536 அகரப்பட்டி கிராம பஞ்சாயத்து, விராலிமலை தாலுகா, விராலிமலை, புதுக்கோட்டை, கோவில் இலுப்பூர் – 621316.	Rs. 16,00,000/-	28.08.2026 28.08.2026 தேதியன்று ரூ. 20,16,758/– (ரூபாய் இருபது லட்சத்து பதினாறு ஆயிரத்து ஏழு நூற்று ஐம்பத்து எட்டு மட்டும்)	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், விராலிமலை துணை பதிவு மாவட்டம், விராலிமலை ஒன்றியம், அகரப்பட்டி கிராம ஊராட்சி, விராலிமலை தாலுகா, அகரப்பட்டி கிராமம், சர்வே எண்.393/5பி, ஹெக்டேர் 0.54.0 பகுதிகள், அதில் ஹெக்டேர் 0.12.5 ஏக்கருக்கு சமமான 0.31 சென்ட்கள் அதாவது, 1,258.473 சதுர மீட்டருக்குச் சமமான 13,516 சதுர அடி பரப்பளவு உள்ள சொத்தில் அனைத்து பயன்பாட்டு மற்றும் பாதைவழி உரிமைகள் அமைந்துள்ளது. அந்தச் சொத்தின் நான்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: சாமிகண்ணு வகையறா நிலம், தெற்கில்: கருட கவுண்டர் நிலம், மேற்கில்: கருட கவுண்டர் நிலம், கிழக்கில்: வண்டிப் பாதை.

கடன்தாரர்(கள்) கோரிக்கை அறிவிப்பு(களு)க்கு உடன்பட மேலும் அதிலும் இங்கே மேலேயும் குறிப்பிட்ட கோரிய தொகையை பணப்பட்டுவாடா ஆகும் தேதி வரையான பொருந்தும் வட்டி, கூடுதல் வட்டி, திரும்பல் கட்டணங்கள், செலவு மற்றும் செலவினங்களுடன் சேர்த்து இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** ஒரு கடனீட்டு கடனீந்தோர் ஆகும். மேலும் கடன்தாரர்(கள்) பெற்ற கடன் வசதியானது கடன்தாரர்(கள்) மூலம் அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்து / பெற்ற கடனுக்கான கடனீட்டு சொத்து ஆகும் என்பதைக் கடன்தாரர்(கள்) கவனத்தில் கொள்ளவும். கடன்தாரர்(கள்) வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முழுமையாக தங்கள் கடன்பொறுப்புகளை தீர்க்கத் தவறினால், கடனீட்டு கடனீந்தோர் விற்பனை மூலம் அல்லது சட்டம் மற்றும் அதன்கீழான விதிகளின் கீழ் கிடைக்கப் பெறும் ஏதேனும் பிற நிவாரணத்தை கோருவதன் மூலம் கடனீட்டுச் சொத்தினை வேறொருவருக்கு மாற்றம் செய்தல் மற்றும் பணமாக மீட்பது உட்பட, வரம்புக்குட்படாது கடனீட்டுச் சொத்து(களை) சுவாதீனம் செய்வதற்கு சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அனைத்து உரிமைகளை பயன்படுத்தும் உரிமையதிகாரம் பெறுவார். கடனீட்டு கடனீந்தோர் விற்பனை அல்லது மாற்றம் செய்யும் உரிமை அமலாக்கத்துக்கு முன்பு கடனீட்டுச் சொத்தை(கள்) **பறிமுதல் செய்ய /அல்லது முத்திரையிடவும்** அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார். கடனீட்டுச் சொத்து(கள்) விற்பனையை தொடர்ந்து, அடமான சொத்துகளின் மதிப்பு கடனீட்டு கடனீந்தோருக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை முடிக்க பற்றாகுறையானதாக இருந்தால், மீதி நிலுவைகளை மீட்பதற்கு தனியாக சட்டப்பூர்வ நடவடிக்கைகளை தொடங்கவும் கடனீட்டு கடனீந்தோர் உரிமை கொண்டிருக்கிறது. இந்த நிவாரணம் ஆனது ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் கடனீட்டு கடனீந்தோருக்கு கிடைக்கப்பெறும் அனைத்து பிற நிவாரணங்களுக்கு கூடுதலானது மேலும் கட்டுப்பாடற்றது ஆகும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13(8), கடன்தாரர்(கள்) கவனத்திற்கு கொண்டுவரப் படுகின்றன. மேலும் சட்டத்தின் பிரிவு 13(13) கீழ் கடன்தாரர்(கள்) கடனீட்டு கடனீந்தோரின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி, கடனீட்டுச் சொத்து(கள்) விற்பனை செய்ய அல்லது கையாள அல்லது கடனீட்டுச் சொத்து(கள்) எதையேனும் விற்பனை, குத்தகை அல்லது பிற வழியில் (வழக்கமான வர்த்தக நடைமுறை தவிர்த்து) பெயர்மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்/தடுக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் மேற்கூறியதற்கு உடன்படாதிருத்தல் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்பு நகல் கீழே கையொப்பமிட்டவரிடம் உள்ளன மேலும் கடன்தாரர்(கள்) விரும்பினால் அதை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அனைத்து வேலை நாட்களிலும் வழக்கமான அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒம்/–

இடம்: புதுக்கோட்டை, தமிழ்நாடு
நாள்: 28.08.2026

அதிகாரப்பூர்வ அதிகாரி,
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம்: எண் 1510, 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளா–னது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டுச் சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. கடனீட்டு சொத்துகள் 13–10–2026 அன்று மின்னணு ஏலம் மூலம் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில்** விற்கப்படும். நாங்கள் https://www.bankeauctions.com என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள மின்னணு ஏலத் தளம் மூலம் பொது ஏலத்தை நடத்த உள்ளோம் என்பதை இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கிறோம். விற்பனை–யின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**/ கடனீட்டு கடனீந்தோர் இணையதளமான www.grihumhousing.com–இல் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்.

வ. எண்	வாடிக்கையாளர் பெயர் (A) முன்மொழிவு எண்.	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை சமர்ப்பிக்கும் தேதி(G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏல தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் இருந்தால் (K)
4	கடன் எண். LAP0597200000005041188 ராமலிங்கம் K, (கடன்தாரர்), ஜெயந்தி R (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 11.12.2025 தேதியின்படி ரூ.13,76,290/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து எழுபத்தாறாயிரத்து இருநூற்று தொன்னூறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையி–லான கூடுதலான ஆண்டொன்றுக்கு 16.35% வட்டி.	நேரடி சுவாதீனம்	திருச்சி மாவட்டம், அரியலூர் பதிவு மாவட்டம், லால்குடி சார் பதிவு அலுவலகம், லால்குடி வட்டம், L.அபிஷேகபுரம் கிராமம், நத்தம் பழைய சர்வே எண்.58/Ai, Sf No.55/A1 இல் உள்ள 32.78 ஏக்கர்கள் பரப்பளவில் 474 ச.அடி உள்ள சொத்தின் நான்கு எல்லைகள் பின்வருமாறு: மேற்கில்: தேரோடும் தெற்கு தெரு மற்றும் வடக்கு பகுதியில் பசுபதி வாத்தியார் சொத்து, கிழக்கில்: ராதாகிருஷ்ணன் பிள்ளை சொத்து, வடக்கி–ல்: வயிறுபிள்ளை சொத்து, தெற்கில்: கருப்பையன் சொத்து, இந்த நான்கெல்லைக–ளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்கு இருபக்கங்களிலும்.33.25 அடி, வடக்கு தெற்கு இருபக்கங்களிலும் 14.25 அடி, மொத்தம் 474 ச.அடி உள்ள சொத்து. 2) இதே சர்வே எண்ணில் 108.5 ச.அடி கொல்லைப்புறம் உள்ள சொத்தின் நான்கு எல்லைகள்: தெற்கில்: கருப்பையன் சொத்து, மேற்கில்: கருப்பையன் சொத்து, கிழக்கில்: எஸ்எம்பிஜெசிஎஸ்நா–தம்மாள் சொத்து, வடக்கில்: இரம் சொத்து, இந்த நான்கெல்லைகளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்கில் உள்ளடங்கிய மேற்குப்பகுதி சுவருக்கு அருகே 3 அடி நடைபாதை நீங்கலாக மீதமுள்ள அளவு 31 அடி, வடக்கு தெற்காக 7 அடி. மொத்தம் 217 ச.அடி உள்ள சொத்து, 3) இதே சர்வே எண்ணில் 210 ச.அடி (பகுதி) பரப்பளவுடன் 1/5 பங்கான 42 ச.அடி பரப்பளவு உள்ள பகுதி சேர்ந்த சொத்து, பின்வரும் நான்கெல்லைகளை உடையது: மேற்கில்: பசுபதி வாத்தியார் சொத்து, வடக்கில்: ராமலிங்கம் சொத்து, தெரு, தெற்கில்: பழனியாண்டி வீடு. இந்த நான்கெல்லைகளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்காக 30 அடி, வடக்கு தெற்காக 7 அடி. மொத்தம் 210 ச.அடி. இதில் பிரிக்கப்படாத 1/5 பங்கான 42 ச.அடி பரப்பளவு சேர்ந்து உள்ளது. மூன்று சொத்துகளும் சேர்ந்து மொத்தம் 624.5 ச.அடி பரப்பளவு உள்ள சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் அதனுடன் மின்வா–ரிய சேவை இணைப்பும் அதற்குரிய வைப்புத் தொகையும் மற்றும் பாதை, பயன்பாட்டு உரிமைகளும் உள்ளது. லால்குடி டவுன் பஞ்சாயத்து வரி மதிப்பீடு எண்.5594, கதவு எண்.310/127, வார்டு எண்.17, மின்சார வாரிய சர்வீஸ் எண்.215–001–285.	Rs. 1830566.00/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பது ஆயிரத்து ஐந்து நூற்று அறுபத்து ஆறு மட்டும்)	Rs. 183056.60/- (ஒரு இலட்சத்து எண்பத்து மூன்று ஆயிரத்து ஐம்பத்தாறு ரூபாய் மற்றும் பைசா அறுபது மட்டும்)	12-10-2026 Before 5 PM	10,000/-	07-10-2026 (11AM – 4PM)	13-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222** மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்மு–தலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 12.10.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை முகவரி : 1510, 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018 கைபேசி எண். +91 8281138143. மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது **30 நாட்கள்** அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 10.06.2026 இடம்: தமிழ்நாடு

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்